அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர்

# எடப்பாடி பழனிசாமி எதையும் அறியாமல் பொறுப்பற்ற அறிக்கை விடுவதா?

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடும் கண்டனம்!



சென்னை, நவ.16 -

அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தன் இருப்பை காட்டிக் கொள்வதற்காக பொறுப்பில்லாமல் அறிக்கை விடுகிறார் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதில் அளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாட்டில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு நிலவுகிறது என்கின்ற வகையில் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதற்கு நான் அவரிடம் தட்டுப்பாடு எங்கு நிலவுகிறது என்று தெரிவித்தால், அதனை நிவர்த்தி செய்து தருவதாகவும் தெரிவித்திருந்தேன். மேலும், தமிழ்நாடு மருந்து சேவை கழகத்தின் மூலம் (Tamilnadu Medical Service Corporation) தமிழ்நாட்டில் மருந்துகள் இருப்பு நிலவரம் குறித்து அறிக்கை வெளியிட்டிருந்தேன். ஆனால் இதனை கருத்தில் கொள்ளாமல் இன்றும் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

### தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் சிறந்த செயல்பாடுகளின் காரணமாக தமிழ்நாடு மருத்துவத்துறை பல்வேறு விருதுகளை கடந்த ஓராண்டாக வாங்கி வருகிறது. 2013-ஆம் ஆண்டு முதல் தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS - National Quality Assurance Standards Certificate) வழங்கப்பட்டு வருகிறது. 2013-ஆம் ஆண்டிற்கு பிறகு 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு கிடைத்த மொத்த விருதுகள் எண்ணிக்கை 549 ஆகும். ஆனால் கடந்த ஓராண்டில் மட்டும் தமிழ்நாட்டிற்கு கிடைத்த விருதுகள் எண்ணிக்கை 310 ஆகும்.

அதேபோல் மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் (LaQshya - Labour Room Quality Improvement Initiative) 2017-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன் கீழ் 6 ஆண்டுகளில் பெறப்பட்ட ஒட்டு மொத்த சான்றிதழ்கள் 79 ஆகும். இதில் இந்த ஆண்டு மட்டும் 45 சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. இதனை எடப்பாடி பழனிச்சாமி தெரிந்துகொள்ள வேண்டும். மேலும், அவர் சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். நான் முன்னரே கூறியது போல் நீங்கள் 10 ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் எத்தனை முறை சுற்றி வந்திருக்கிறீர்கள், எத்தனை மலைக்கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்றிருக்கிறீர்கள், எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீங்களோ அல்லது உங்கள் அமைச்சர் அவர்களோ சென்றிருக்கிறீர்கள், நாங்கள் எத்தனை முறை இதை செய்திருக்கின்றோம் என்று தெரிந்து கொண்டு, இது குறித்து எங்களிடம் நேரிடையாக விவாதிக்க தயாரா?

### ஒளிந்து கொண்டு பேசுவது அழகல்ல!

ஆகையால் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய நீங்களோ அல்லது உங்களை சார்ந்த ஒருவரோ சட்டமன்றம் நடக்கும்போது இது குறித்து பேசலாம். சட்டமன்றம் நடக்காதபோது எங்கேயோ ஒரு இடத்தில் ஒளிந்துக்கொண்டு பேசுவது எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு அழகல்ல.

எடப்பாடி பழனிச்சாமி மருந்து மாத்திரைகள் 30 நாட்களை கடந்தும் இல்லை என்று அறிக்கை விட்டு இருக்கிறார். தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (TNMSC) என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வருடத்திற்கும் எவ்வளவு மருந்துகள் வாங்கப்படுகிறது என்று பார்த்தோமேயானால் 313 அத்தியாவசிய மருந்துகள் வாங்கப்படுகிறது, 234 வகையான மருத்துவ அறுவை மற்றும் தையல் உபகரண சாதனங்கள், 326 சிறப்பு மருந்துகள் மற்றும் 7 இரத்தம் உறைதல் சம்பந்தப்பட்ட மருந்துகள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு ஏழை மக்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பொது சுகாதார இயக்குநரகத்தின் சார்பில் பூச்சிக் கொல்லி சம்பந்தமான மருந்துகள் வாங்கித்தரப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் ஒவ்வொரு ஆண்டும் அதன் தரத்தை நிர்ணயம் செய்து எவ்வளவு தேவை என்று குறிப்பிடப்பட்டு வாங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களில் மருந்து கிடங்குகள் உள்ளது.

இந்த 32 மாவட்டங்களில் உள்ள மருந்து கிடங்குகள் மூலம் ரூ.326.92 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதியதாக 6 மாவட்டங்களிலும் மருந்து கிடங்குகள் அமைக்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கொள்முதல் செய்யப்பட்டுள்ள மருந்துகள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவைக்கேற்ப பிரித்து அனுப்பப் பட்டு, தற்போது கையிருப்பில் உள்ள மருந்துகள் தொகை ரூ.240.99 கோடி ஆகும்.

### பணியாளர் தேர்வு வாரியப் பணிகள்!

இதற்கு பிறகும் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு மருந்துகள் தட்டுப்பாடு இருக்கிறது என்ற சந்தேகம் இருக்குமேயானால் வாருங்கள், நானும் உடன் வருகிறேன், நேரடியாக சென்று ஆய்வு செய்வோம்.

மேலும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மருத்துவ காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கூறியிருக்கிறார். இது தொடர்பாக நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். மருத்துவர்கள் பணியிடங்கள் 1021, மருந்தாளுநர் பணியிடங்கள் 986, சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் 1,066, கிராம சுகாதார செவிலியர்கள் 2,222 மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (MRB) மூலம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக நடைபெற்ற பல்வேறு வழக்குகள் தற்போது முடிவிற்கு வந்துள்ளது. சான்றிதழ்கள் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்துள்ளது. விரைவில் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணி நியமனம் செய்யப்படவுள்ளனர்.

எடப்பாடி பழனிச்சாமிக்கு வேறு ஏதேனும் சந்தேகம் இருந்தால் தெரிவிக்கலாம். அது தொடர்பாக விவாதம் செய்ய தயாராகவே உள்ளோம் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழக இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக கேரள மாநிலம் திருவனந்தபுரம் விமான நிலையம் வந்தடைந்தார்கள்.அவர்களை கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், குழித்துறை நகர்மன்ற தலைவர் ஆசைத்தம்பி, சிற்றார் ரவிச்சந்திரன், சப்பாத்து ராஜன், அனீஷ், முகமது ஷாபி, அருள் ஜோதி மற்றும் கேரள தி.மு.க. மற்றும் இளைஞர் அணி உட்பட அனைத்து அணி நிர்வாகிகளும் விமான நிலையத்தில் வரவேற்றனர். அதைத் தொடர்ந்து அங்கிருந்து கன்னியாகுமரி புறப்பட்டுச் சென்றனர். பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் உடன் சென்றார்.

# ஐஸ்லாந்து நாட்டில் நில அதிர்வு!

ரெய்காவிக், நவ. 16 -

தொடர்ச்சியான நில அதிர்வுகளின் விளைவாக எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் அதிகரித்ததன் காரணமாக, ஐஸ்லாந்து நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஐஸ்லாந்து நாட்டில், கடந்த 14 மணி நேரத்தில் 800 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டிருப்பதால் அங்கு எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டு, அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனால், அந்நாட்டில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர். ஐஸ்லாந்தின் தென் மேற்கு ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில்தான் 14 மணி நேரத்தில் தொடர்ந்து சுமார் 800 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் வடக்கு கிரண்டாவிக் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவாகியுள்ளது. இதனால், கிரிண்டாவிக் அருகே உள்ள பிரபல சுற்றுலா தலமான ப்ளூ லகூன் மூடப்பட்டுள்ளது.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஒருங்கிணைந்த வளாகத்தில், நேற்று முன்தினம் (14.11.2023) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் 70வது கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு கூட்டுறவுக் கொடியினை ஏற்றிவைத்தார். சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆஷா அஜித் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.


